சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.127/2024

02.02.2026

வா.சா.1 திருமதி. நாச்சம்மை, க/பெ. ராஜேந்திரன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதி எந்த முகவரியில் வசிக்கிறார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது அல்ல என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பிரதிவாதி எந்தக்காலத்திலும் என்னிடம் ரூ.2,00,000/- கடனாக வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் வீட்டுக்குடித்தனம்தான் செய்கிறேன். வட்டி தொழில் எதுவும் செய்யவில்லை. எனக்கு எந்த வருமானமும் இல்லை என்றாலும் பிரதிவாதிக்கு நான் சொன்னது போல் எந்த தொகையும் கடனாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் பணத்தை 3 வருடங்களாக திரும்ப கேட்டது சம்பந்தமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் பிரதிவாதிக்கு கடன் கொடுக்கவில்லை என்றாலும் அறிவிப்பு எதுவும் பிரதிவாதிக்கு அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1, 3 ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் வேறுபட்டு உள்ளது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி கையெழுத்தை மோசடியாக போட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு சரியான மறுபயன் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தை மோசடியாக தயார் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. குமரப்பன் என்பவர் பெற்ற பணத்திற்காக பிரதிவாதி மீது தவறுதலாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் பிரதிவாதி எனக்கு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.